# அரசியலமைப்பை அழித்துவிடாதீர்கள்... மக்களவையில் தயாநிதிமாறன் பேச்சு...

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

Centre for Monitoring Indian Economy (CMIE) வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, 2021 ஆம் ஆண்டின் 8 சதவீதம், 2021-22 ஆம் ஆண்டில் 5.9 சதவீதம், 2022-23 ஆம் ஆண்டில் 7.3 சதவீதம். நாட்டில் நிலவி வரும் சூழ்நிலையை பார்த்தால் அரசு வெளியிட்டுள்ள விவரங்களின் தரவுகளை விட CMIE வெளியிட்டுள்ள இந்த தரவுகளின் மீதுதான் அதிக நம்பிக்கை ஏற்படுகிறது. மேலும் தற்போதைய வேலைவாய்ப்பின்மை 9.2 சதவீதமாக, ஜூன் மாதத்தில் அதிகரித்துள்ளது, இது மே மாதத்தில் 7 சதவீதத்தை விட மிகவும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் உயர்ந்துள்ளது. பெண்களின் வேலைவாய்ப்பின்மை 18.5 சதவீதம். ஆண்களின் வேலைவாய்ப்பின்மை 7.8 சதவீதம். காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி காலம் நிறைவடையும்போது, வேலைவாய்ப்பின்மையின் சதவீதம் 5.44 சதவீதமாக இருந்தது.

### விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்கப்பட்டதா?

நிதியமைச்சர் அவர்கள், 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வல்லரசாக மாற்றுவதற்கு பா.ஜ.க அரசு வகுத்துள்ள 9 பிரதான

குறிக்கோள்களை அறிவித்துள்ளார். அதில் விவசாயம், வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு உள்ளடக்கிய மனித வள மேம்பாடு, சமூக நீதி, நகர்ப்புற மேம்பாடு, எரிசக்தி பாதுகாப்பு, உள்கட்டமைப்பு, கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் மற்றும் அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்தங்கள், உற்பத்தித்திறன் மற்றும் அதிலுள்ள பின்னடைவு ஆகியவை அடங்கும். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோம். முதலாவதாக, வேளாண் வளர்ச்சியை எடுத்து கொண்டால், பிரதமர் உறுதியளித்தன்படி 2022 ஆம் ஆண்டிற்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான வரைபடத்தை வகுக்க 2016 ஏப்ரலில் அமைச்சர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அவர்களின் கணிப்பின் படி, ஏழு ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பு ஆக ஆண்டிற்கு 10.4 சதவீதம் அவர்களின் வருமானம் உயர வேண்டும். ஆனால் 201516 ஆம் ஆண்டில் ரூ.96,703 ஆக இருந்த வருவாய், இறுதியாக 201718 ஆம் ஆண்டின் தரவுகளின்படி வெறும் ரூ.192,694 மட்டுமே. இதன்படி, விவசாயிகளின் வருவாய் வளர்ச்சி வெறும் 2.8 சதவீதம் மட்டுமே. இதுவும் வேளாண்மை சாரா வருமானம் ஆகும். ஏனென்றால் 2015 16 ஆம் ஆண்டில் இருந்து விவசாய வருவாய் ஆண்டிற்கு 1.5 சதவீதம் குறைந்துள்ளது.

பா.ஜ.க ஆட்சி அமைந்ததும், நதிகளை இணைப்போம் என்ற அறிக்கை வெளியிட்டது. இதற்காக நீர்வளத்துறை அமைச்சகத்தை ஜல் சக்தி அமைச்சகம் என்று பெயர் கூட மாற்றியது. ஆனால் இன்று வரை அது என்ன சாதித்தது என்று தெரியவில்லை. இதைப்பற்றி ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட நீங்கள் தயாரா?

### வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி!

நான் ஏற்கெனவே கூறியது போல ஒன்றிய அரசு அதன் திறனுக்கு ஏற்றவாறு தனது பங்களிப்பை மக்களுக்கு அளிக்க வேண்டும். ஒரு மாநில அரசு செய்யும் அளவிலான வேலையை மட்டும் செய்ய கூடாது.

அனைவருக்குமான மனித வள மேம்பாட்டைப் பொறுத்த வரையில், அனைவருக்குமான மனித வள மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான அரசாங்கத்தின் உத்தியானது என்னவென்றால், பல்வேறு துறைகளில் விரிவான வளர்ச்சியில் கவனம் செலுத்தாகும். அந்த வகையில் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார வலுவூட்டலுக்கான திட்டங்கள், கைவினைஞர்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் தொழில்முனைவோருக்கு ஆதரவாக பிரதமர் விஸ்வகர்மா மற்றும் பிரதமர் ஸ்வாநிதி போன்ற திட்டங்களை மேம்படுத்துதல், கிழக்கில் பூர்வோதயா முன்முயற்சி, பாட்னாபூர்னியா விரைவுச்சாலை போன்ற திட்டங்கள், ஆந்திரப் பிரதேசத்திற்கு ரூ.15,000 கோடி மூலதனத் நிதிகள் மற்றும் போலவரம் பாசனத் திட்டத்திற்கான ஆதரவு அனைத்தும் பாராட்டுக்குரியவை. ஆனால் எனது மாநிலமான தமிழ்நாடு ஏன் இதில் சேர்க்கப்படவில்லை? மற்ற பிற மாநிலங்களும் ஏன் சேர்க்கப்படவில்லை? நான் கேட்கிறேன், கடந்த காலங்களில் இதே போன்ற திட்டங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதற்கான அறிக்கை எங்கே என்று இந்திய மக்கள் அறிய விரும்புகிறார்கள். இந்த தலைப்புகளில் நிதி மற்றும் அதன் விளைவுகளில், தெளிவற்ற தரவுகளை மட்டுமே கொடுத்துள்ளது பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

### ‘நீட்’ தேர்வு சமூக நீதிக்கு எதிரானது!

இந்தியாவின் பொது சுகாதார அமைப்பு நிதி குறைவாகவும் அதிக சுமையாகவும் உள்ளது. நாட்டின் சுகாதாரச் செலவினம் இன்னும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.28 சதவீதமாகதான் உள்ளது, இது உலக சராசரியான ஆறு சதவீதத்தை விட மிகக் குறைவு. கிராமப்புறங்களில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ வசதிகள் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன. எனவே, மனித வள மேம்பாட்டை எவ்வாறு சரியாகப் பெறுவீர்கள்?

சமூக நீதி குறித்து எடுத்துக் கொண்டால், சாதி அடிப்படையிலான பாகுபாடுகளும் சமூக ஏற்றத்தாழ்வுகளும் நீடிக்கின்றன. பட்டியலின மற்றும் பிற விளிம்புநிலை சமூகங்கள் குறிப்பிடத்தக்க சமூகபொருளாதார சவால்களை தொடர்ந்து எதிர்கொள்கின்றன. சமூக நீதியை உறுதி செய்ய சரியான கொள்கைகளும் வலுவான அமலாக்கமும் தேவை. ஆனால், சமூகப் பாதுகாப்பு தேவைப்படும் இந்தப் பிரிவினருக்கான நலத்திட்டங்கள் புறக்கணிக்கப்படுவதும், செலவுகள் குறைக்கப்படுவதும்தான் நாம் பார்க்கிறோம். நீட் தேர்வு எப்படி சமூக நீதிக்கு எதிரானது என்பதை தமிழகத்தைச் சேர்ந்த நாங்களும், எங்கள் முதலமைச்சரும் பல முறை விளக்கியும், நீங்கள் இன்னும் அதை ஒழிக்காமல் பிடிவாதமாக இருக்கிறீர்கள்.

அவைத்தலைவர் அவர்களின் சொந்த தொகுதியான கோட்டாவில், நீட் கொடுமையால் எத்தனையோ மாணவர்கள் தற்கொலைக்கு முயல்கிறார்கள், இதே தான் மற்ற மாநிலங்களிலும் நடக்கிறது. இது நமது சந்ததியினரின் எதிர்காலத்தை கேள்வி குறியாக்கும் பிரச்னை. உங்கள் கர்வத்தை விட்டுவிட்டு இப்பிரச்னைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண வேண்டும். நீட் நுழைவுத் தேர்வு சமூக நீதிக்கு எதிரானது, இதை இப்போதாவது நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### நகர்ப்புற வளர்ச்சி

சென்னை மெட்ரோ இரயில்வே திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கிறீர்கள், கோவை, மதுரை மெட்ரோ இரயில் திட்டத்தைப் பற்றி பேச கூட தயங்குகிறீர்கள், பிரதமர் வீட்டு வசதி திட்டம் என்ற பெயரில் மாநிலங்களுக்கு நிதி சுமையை உயர்த்துகிறீர்கள், நாட்டில் முக்கியத் தலைநகரங்களில் காற்று மிகவும் மாசடைந்துவிட்டது. எங்கு பார்த்தாலும், காடுகளை அழிப்பது அதிகரித்து கொண்டே இருக்கிறது. இப்படி இருக்கையில் நகரங்கள் எப்படி வளரும்? ஜூன் மாதம் முடிவடைய வேண்டிய ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் காலக்கெடுவகி மார்ச் 2025 ஆம் ஆண்டிற்கு ஒத்திவைத்துவிட்டீர்கள்.

### சென்னையில் பிரதமரின் ரோடு ஷோ!

கடந்த நிதியாண்டில் 8000 கோடி வழங்கிய இடத்தில், இந்த 2400 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளீர்கள். நகர்ப்புற புனரமைப்பு திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்படும், இத்திட்டத்தின்கீழ் நகரங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவேன் என்று கூறுகிறீர்கள், ஆனால் சென்னை நகரத்திற்கு பிரதமர் ரோடு ஷோவிற்கு வந்தார், அவருக்கு பிடித்த இடமான மேற்கு மாம்பலத்தில் இருந்து எனது தொகுதியை கடக்கும்போது, ஏழை எளிய மக்கள் வசிக்கும், குடியிருப்புகளை காண விரும்பாததால் அதை திரையிட்டு மறைத்தீர்கள், நமஸ்தே டிரம்ப் நிகழ்ச்சியின்போது அமெரிக்க பிரதமர் குஜராத் வந்த போது அங்குள்ள ஏழை எளிய மக்களை எப்படி திரையிட்டு மறைத்தீர்களோ அதையே தான் சென்னையிலும் செய்தீர்கள். அனைவரின் வீட்டிற்கும் குழாயில் குடிநீர் வரும் என்று சொன்னீர்களே, அந்த திட்டம் என்ன ஆனது?

பிரதமர் எரிசக்தி பாதுகாப்பு பற்றி பேசுகிறார். சிறிய அணு உலைகள், மேற்கூரை சோலார் ஆலைகள் மற்றும் மேம்பட்ட அல்ட்ரா சூப்பர் கிரிட்டிகல் (AUSC) அனல் மின் நிலையங்களுக்கான உள்நாட்டு தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் பன்முகப்படுத்தப்பட்ட ஆற்றல் திட்டத்தை நிதியமைச்சர் அறிவித்துள்ளார். இதற்கான நிதி ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு ஒதுக்கப்படும் மற்றும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்தத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படும் என்ற தரவுகளை எங்களுக்கு தரமுடியுமா?

ஜூன் மாத நிலவரப்படி, இந்தியாவின் மின்சாரத்தில் சுமார் 54.5 சதவீதம் நிலக்கரி, எரிவாயு மற்றும் டீசல் போன்ற வெப்ப மூலங்களிலிருந்து வந்தது, அதே நேரத்தில் 45.5 சதவீதம் புதைபடிவமற்ற எரிபொருள் மூலங்களிலிருந்து வந்தது, இதில் 1.8 சதவீத அணுசக்தி திறன் அடங்கும் என்று மின் அமைச்சகம் தெரிவித்துள்ளது. குறுகிய காலத்தில் இதை கடுமையாக மாற்ற நிதியமைச்சர் எப்படி திட்டமிட்டுள்ளார்? ஒரு மாநிலம் சிறிய அணு உலைகளைத் தேர்வு செய்ய வேண்டாம் என்று முடிவு செய்து, மாற்று மூலத்தைத் தொடர விரும்பினால் என்ன நடக்கும்? இந்த அறிவிப்பு எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதற்கான வழிமுறை உள்ளதா?

### பா.ஜ.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் வாடிக்கையாகிவிட்டது!

லட்சிய பசுமை ஹைட்ரஜன் மிஷன் தொடர்பான அறிவிப்பும் வெளியாகியுள்ளது, இது இடைக்கால பட்ஜெட்டில் ரூ. 600 கோடி ரூபாய். மின்சார வாகனங்கள் மற்றும் FAME III தொடர்பான எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை, இது தூய்மையான சூழலுக்கு மட்டுமின்றி தொழில்துறைக்கும் முக்கியமானதாக இருக்கும். கடலோர காற்றாலை ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான நிதியைப் பற்றிய நிலைமை என்ன?

உள்கட்டமைப்பு தொடர்பாக, நிதியமைச்சர் பட்ஜெட்டில் ரூ. 202425 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு 11.11 லட்சம் கோடி, மேலும் சாலைகள் மற்றும் ரயில்வே திட்டங்களுக்கு இந்த செலவினத்தில் கிட்டத்தட்ட 50 சதவீதம் கிடைக்கும்.

பல ஆண்டுகளாக மக்கள் நலத்திட்டங்களில் நிதி குறைக்கப்படுவதும், மூலதன செலவுகளை அதிகரிப்பதுமே பா.ஜ.க அரசின் நிதிநிலை அறிக்கையில் வாடிக்கையாகிவிட்டது.

வரவு செலவுத் திட்டத்தின் மூலதனச் செலவு கடந்த ஆண்டு ரூ. 9.48 லட்சம் கோடியாக இருந்தது. நிதியமைச்சர் மீண்டும் மூலதனச் செலவினங்களை அதிகரிப்பதில் முனைப்பை காட்டி வருகிறார். ஆனால் அது எவ்வாறு முடிவுகளை வழங்க உதவியது என்பதைக் தெரிவிக்கவில்லை. முதலீட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முடக்கம் மற்றும் நிதியல்லாத நிறுவனங்களின் நிகர நிலையான சொத்துக்களின் அதிகரிப்பு ஆகியவை மூலதனச் செலவினச் சுழற்சியின் மறுமலர்ச்சிக்கான இரண்டு சக்தி வாய்ந்த வழிகாட்டிகளாகும். கடந்த சில ஆண்டுகளின் மூலதன முதலீடுகளுக்கு நாங்கள் இன்னும் எந்த முடிவையும் காண முடியவில்லை. எனவே, நாங்கள் எப்படி உறுதியாக இருக்க முடியும்?

பெரிய மூலதனச் செலவுகள், நலத்திட்ட உதவிகளுக்கு பயன்படுத்திய வேண்டிய செலவாகும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. முக்கிய திட்டங்களில் கணிசமான நிதி குறைவும் ஏற்படுகின்றன மேலும், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய துறைகளில் முதலீடுகள் இல்லை. அதேபோல், சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள், முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள் என அனைத்திலும் நிதி குறைக்கப்பட்டுள்ளன.

### விலைவாசி உயர்வு!

அதுமட்டுமல்லாது, கடந்த ஐந்தாண்டுகளில் விலைவாசி உயர்வு மற்றும் பணவீக்கத்தால் 2019 ஆம் ஆண்டில் ஒரு ரூபாய்க்கு என்ன பொருள் வாங்கினோமோ அதில் பாதியைதன் இன்று வாங்க முடிகிறது. போதுமான நிதியின்மை மற்றும் பணவீக்கம் ஆகிய இரண்டும் நமது நாட்டின் ஏழைகள் மற்றும் மிகவும் பின்தங்கியவர்களையே நேரடியாக பாதிக்கிறது. நாட்டில் நிலவும் பணவீக்கமானது, வரலாறு காணாத வகையில் அதிக வேலைவாய்ப்பின்மை, குறைந்த சேமிப்பு போன்ற நெருக்கடிகளை உண்டாக்கி நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது. இதற்கெல்லாம் செலவிட வேண்டிய நிதியைதான் நாம் மூலதன செலவீனத்திற்கு செலவளித்துக் கொண்டிருக்கிறோம். எனவே இந்த மூலதன செலவீனங்கள் நிலைமையில் மாற்றத்தை எப்போது நாம் காண்போம் என்று அறிய விரும்புகிறேன்.

### புதுமை மற்றும் வளர்ச்சி.

உள்நாட்டு கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியை வளர்ப்பதற்கு நாம் அனைவரும் ஆதரவாக இருப்போம், ஆனால் ஒன்றிய அரசு அதற்கு போதுமான மற்றும் நிலையான நிதியுதவியை தொடர்ந்து வழங்குமா? மேலும் அடிப்படை ஆராய்ச்சி மற்றும் முன்மாதிரி மேம்பாட்டிற்கான “அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி நிதியம்” செயல்படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை எப்படி செயல்படுத்த அரசாங்கம் முன்மொழிகிறது? சாலை வரைபடம் உள்ளதா? அதுமட்டுமல்லாது நிதித் தொகுப்பிற்கு வணிக அளவில் தனியார் துறை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக ரூ.1 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. ஆனால் அத்தகைய அறிவிப்புக்கு எங்கிருந்து நிதி வரப் போகிறது?

**நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்கள் மிகவும் படித்தவர் என்று நினைத்திருந்தேன். அவர் இப்போது இந்தியாவிற்கு புதிய வரைப் படத்தை உருவாக்கியுள்ளார். அவர் இந்தியாவின் கிழக்குப் பகுதியை புதிதாக வடிவமைத்துள்ளார். இந்த புதிய கிழக்குப் பகுதிக்குள் பீகார் மற்றும் ஆந்திர மாநிலங்கள் அடங்கியுள்ளது, மேற்கு வங்கமோ அதில் அடங்கவில்லை. ஆந்திர மாநிலத்துடன் எல்லைகளை பகிர்ந்து கொள்ளும் தமிழ்நாடு மாநிலமோ இந்த புதிய கிழக்கில் இணைக்கப்படவில்லை. இது எப்படி உள்ளது என்றால், உங்களுக்கு வந்தால் ரத்தம், எங்களுக்கு வந்தால் தக்காளி சட்டினியா என்பது போல்தான் இருக்கிறது.**

அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்தங்கள் பற்றி கூறுகிறீர்கள். பல்வேறு அளவிலான உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாகத் திறன்களைக் கருத்தில் கொண்டு, மாநிலங்கள் முழுவதும் நிலம் மற்றும் தொழிலாளர் சீர்திருத்தங்களை ஒரே மாதிரியாக செயல்படுத்துவதை உறுதி செய்ய அரசாங்கம் எவ்வாறு திட்டமிட்டுள்ளது? மாநிலங்களுக்கான நிதி ஆதரவை எவ்வாறு கட்டமைக்க ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது? நிதி ஒதுக்கீட்டை தீர்மானிக்க என்ன அளவுகோல்கள் பயன்படுத்தப்படும்?

டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிலப் பதிவுகள் மற்றும் ஜிஐஎஸ்(GIS) மேப்பிங்கின் பலன்கள் அனைத்து குடிமக்களுக்கும் கிடைப்பதை உறுதி செய்வதற்காக, குறிப்பாக கிராமப்புறங்களில் உள்ள டிஜிட்டல் பிரிவை அரசாங்கம் எவ்வாறு நிவர்த்தி செய்யும்? விவசாயிகள், தொழிலாளர் சங்கங்கள் மற்றும் தொழில்துறை பிரதிநிதிகள் உட்பட பல்வேறு பங்குதாரர்களை அரசாங்கம் எவ்வாறு சீர்திருத்தச் செயல்பாட்டில் ஈடுபடுத்தும், அவர்களின் கவலைகள் மற்றும் பரிந்துரைகள் போதுமான அளவு கவனிக்கப்படுவதை எவ்வாறு உறுதிசெய்யும்? ஆலோசனையின்மையால் உங்கள் வேளாண் சட்டங்கள் எவ்வாறு பின்வாங்கின என்பதை நாங்கள் ஏற்கனவே பார்த்தோம்.

### ரூ.4 லட்சம் கோடி மானியத்திற்கு பணம் எங்கே?

இறுதியாக, ஒன்றிய பட்ஜெட் நடுத்தர மக்களின் தேவைகளை மீண்டும் ஒரு முறை நிறைவேற்றத் தவறிவிட்டது. நீங்கள் பிரதமராக இருப்பதற்கு ஆந்திரா மற்றும் பீகார் மாநிலங்களுக்கு கிட்டத்தட்ட ரூ.4 லட்சம் கோடி ரூபாய் மானியம் தருவதாக வாக்குறுதி அளித்துள்ளீர்கள். இதற்கெல்லாம் எங்கிருந்து பணம் வரப் போகிறது? யாருடைய செலவில் இதைச் செய்யப் போகிறீர்கள்? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

எங்கள் முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் மக்கள் தேவைகளை தான் கோரிக்கையாக வைத்துள்ளார். தமிழ்நாடு ஆட்ஷி நிர்வாகத்தில் நெ.1 மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

அப்படி இருக்கையில் எதற்காக தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கிறீர்கள், எங்கள் மக்கள் உங்களுக்கு வாக்களிக்கவில்லை என்றா? தமிழ்நாட்டு மக்கள் உங்களை ஏன் ஆதரிக்கவில்லையென்றால், நீங்கள் இரட்டை வேடம் போடுகிறீர்கள். நீங்கள் எப்போதும் அர்த்தமற்ற அவதூறுகளை பரப்புகிறீர்கள். நீங்கள் மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் மக்களை பிரிக்க பார்க்கிறீர்கள். அது மட்டுமல்லாது நீங்கள் மக்களை பிறப்பின் அடிப்படையில் வேறுபடுத்தி பார்க்கிறீர்கள்.

**இதுவரை பலமுறை பிரதமர் அவர்கள் தமிழ் மொழியை நேசிப்பதாக கூறி யுள்ளார். நம் தமிழ் மொழிக்காக அல்லது தமிழக மக்களுக்காக என்ன செய்துள்ளார்? “வெறும் வாயில் வடை சுடறவர் தான் மோடி” என்று தமிழில் சொல்கிறோம். இதன் பொருள்: “அவர் வடையை எண்ணெயில் அல்ல, வாயில் வறுக்கிறார்.” வடை கூட நமக்கு கொடுப்பதில்லை. அதையும் அவரே சாப்பிட்டுவிடுகிறார்.**

இதை உங்களிடம் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தமிழக மக்கள் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை தண்டிக்க முயற்சிக்காதீர்கள். தமிழகத்தை தண்டித்தால் இந்தியா வளராது. இந்தியா வளர வேண்டும் என்றால் தமிழகம் வளர வேண்டும். நமது பிரதமரால் தமிழக மக்களுக்கு இன்னும் ஒரு பெரிய அச்சம் உள்ளது. 2014ஆம் ஆண்டு முதன்முதலாக நாடாளுமன்றத்திற்குள் பிரதமர் நுழைந்த போது, பழைய நாடாளுமன்றத்துக்கு வந்து விழுந்து விழுந்து நாடாளுமன்றத் திடம் ஆசி பெற்றார்.

அது 2014ம் ஆண்டு. இப்போது அந்த பாராளுமன்ற கட்டிடம் இல்லை. இப்போது, 2024 இல், பிரதமர் அரசியலமைப்பிடமிருந்து ஆசி பெற்றார். அவர் அரசியலமைப்பு புத்தகத்தை எடுத்து அனைத்து, ஆசீர்வாதங்களையும் பெற்றார். தமிழக மக்களும், நாட்டு மக்களும் இப்போது கவலையில் உள்ளனர். தயவு செய்து அரசியலமைப்பை அழித்துவிடாதீர்கள், நன்றி.

வாழ்க தமிழ்!

இவ்வாறு தயாநிதிமாறன் அவர்கள் பேசினார்.

---

## இறக்கும் தருவாயிலும் இளம்பிஞ்சுகளின் உயிர்காத்த

# ஓட்டுநர் சேமலையப்பன் மறைவுக்கு இரங்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜூலை 27-

பள்ளி வாகனம் ஓட்டும்போது மாரடைப்பு ஏற்பட்ட சூழலில் வாகனத்தை சாலையோரம் பாதுகாப்பாக நிறுத்தி மாணவர்களை காப்பாற்றிய திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தைச் சேர்ந்த ஓட்டுநர் சேமலையப்பன் நிகழ்விடத்திலேயே உயிரிழந்த துயர சம்பவம் குறித்து முதலமைச்சர் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

இறக்கும் தருவாயிலும் இளம் பிஞ்சுகளின் உயிர்காத்த சேமலையப்பன் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது மனிதநேயமிக்க செயலால் புகழுருவில் அவர் வாழ்வார்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவிலில் உள்ள தனியார் பள்ளி ஓட்டுநர் பள்ளி குழந்தைகளை காப்பாற்றி பின்னர் தனது இன்னுயிரை இழந்த காங்கேயம் சத்யா நகர் பகுதியைச் சேர்ந்த சேமலையப்பன் அவர்களின் பெற்றோர் மற்றும் மகன்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் உள்ளனர்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி

# ஓட்டுநர் சேமலையப்பன் குடும்பத்திற்கு ரூ,5 லட்சம் நிதி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் வழங்கினார்!

*சென்னை, ஜூலை 27-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின்அறிவிப்பின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பள்ளிகுழந்தைகளை காப்பாற்றிதன்னுயிர்நீத்த சேமலையப்பன் அவர்களின் பெற்றோர் மற்றும் மகன்களிடம் ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.*

*திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவிலில் உள்ள தனியார் பள்ளியில் வாகன ஓட்டுநராக பணிபுரிந்து வந்த காங்கேயம், சத்யா நகரைச் சேர்ந்த சேமலையப்பன் (வயது 49) என்பவர் 24.07.2024 அன்றுமாலை பள்ளி முடிந்தவுடன் பள்ளிக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு கோவை - திருச்சி நெடுஞ்சாலை வெள்ளக்கோவில் பழைய காவலர் குடியிருப்பு அருகே வந்துகொண்டிருந்தபோது தனக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் உடனடியாக தான் ஓட்டிவந்த பள்ளி வாகனத்தில் இருந்த பள்ளிக் குழந்தைகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாத வகையில் பத்திரமாக நிறுத்திய பின்னர் தன்னுயிர் நீத்தார்.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (26.07.2024) திருப்பூர் மாவட்டம், காங்கேயம், சத்யா நகரைச் சேர்ந்த சேமலையப்பன் அவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, அவரதுபெற்றோர் மற்றும் மகன்களிடம் முதலமைச்சரின் பொதுநிவாரண நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.*

*பள்ளிக்குழந்தைகளை காப்பாற்றிதன்னுயிர் நீத்த காங்கேயம் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த சேமலையப்பன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திருப்பூர் மாவட்ட மக்களின் சார்பில் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.*

*இந்நிகழ்வின் போது, மாவட்டஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) குமாரராஜா ஆகியோர் உடனிருந்தனர்.*



இராணிப்பேட்டை முத்துக்கடை பஸ் நிலையத்தில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் ரூ.1.93கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 5புதியபேருந்துகளை கொடி அசைத்து தொடங்கி வைத்தனர். அருகில் மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திர கலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகராட்சி தலைவர் சுஜாதா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விநோத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.